05.03.2025

OS.170/2013

**வா.சா. 8 – வேல்முருகன்**

**<u>வாதிகள் தரப்பு முதல் விசாரணை</u>**

நான் பஞ்சாயத்து செயலாளராக வேலை செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் சார்பாக செயலாளர் ஆண்டி என்பவர் கட்டிட அனுமதி கேட்டு மனு செய்தார். அந்த மனுக்கள் மீது 2013ம் ஆண்டுக்கு முன்பாகவே பஞ்சாயத்தில் இருந்து கொடுக்கப்பட்டது. 3 கட்டிடங்களுக்குதான் கொடக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படுவதுதான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நாங்கள் கொடுத்த பதில் என்றால் சரிதான் அது வா.சா.ஆ.34 ஆகும். சர்வே எண்.198/2 பார்ட்டில் உள்ள நிலத்திற்கு MCA கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். உயர்நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமிக்கப்பட்டு அந்த இடத்தை பார்வையிட்டார்கள். அப்போது அந்த சர்வே எண்ணில் கட்டிடம் எதுவும் இல்லை என்று குறித்து கொண்டு சென்றார்கள். 2013ம் ஆண்டிற்கு முன்பாக இமயம் இன்ஜினியரிங் கல்லூரி சம்பந்தமாக எந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. கட்டிட அனுமதி வழங்குவதற்கு பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றுவோம். 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக பஞ்சாயத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். அது வா.சா.ஆ.35 (1 முதல் 307) ஆகும். அதற்குரிய முகப்பு கடிதம் வா.சா.ஆ.36 ஆகும்.

**(குறுக்கு விசாரணைக்காக சாட்சியம் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/–M. Christopher)

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.